வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சங்க இலக்கியத்தில் மனிதநேயம்

**முனைவர்.ஜா.ஸ்டெல்லாமேரி**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**ஆய்வுசுருக்கம்**

இன்றைய அறிவியல் உலகில் மனிதநேயம் என்ற சொல்லின் பயன்பாடு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கிறது. நவீன உலகில் மனிதர்களிடம் நாகரிகம் எந்தளவுக்கு விரிவடைந்திருக்கின்றதோ, அந்தளவுக்கு மனிதநேயம் குறைந்து கொண்டேயிருக்கிறது. அறிவியல் வளர்ச்சியில் மனிதநேயப் பண்புகள் அழிந்து, தனிமனிதனின் சுயநலம் என்ற அணுஆயுதமாக மாறிக்கொண்டுவருகின்றான். இன்றைய தலைமுறை மத்தியில் பொதுநலம் என்பது என்ன, சுயநலம் என்பது என்ன என்ற வேறுபாடுத்தெரியாது வளர்ந்து வருகின்றனர். சங்க இலக்கியங்கள் வாயிலாக நமது மறந்துபோன மனிதநேயத்தை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

சங்கப்புலவர்களின் அனுபவக் களஞ்சியமாக விளங்கும் சங்க இலக்கியங்கள் முழுவதும் மனிதநேயம் பற்றியசெய்திகள் விரவிக்கிடக்கின்றன. சங்கப்புலவர்கள் புரவலனிடம் பொருள் பெறுவதைமட்டும் நோக்கமாகக் கொண்டு பாடல்கள் பாடவில்லை, மானுடஉறவை வலுப்படுத்தினர். புரவலனுக்கு நல்ல நண்பனாகவும், தூதுவனாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்துள்ளனர். தம் நட்புக்குரிய தலைவர்களோடு இரண்டறக் கலந்து வாழ்விலும், தாழ்விலும் அவர்களுக்கு ஊன்றுகோளாகவும், நல்லஆசானாகவும் வாழ்ந்துகாட்டியுள்ளனர். சங்க இலக்கியத்தில் மனிதநேயத்தின் பதிவுகளை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

**மனிதநேயம்**

மனிதநேயம் என்பது மனிதனை மனிதன் அன்புசெய்வதாகும். அன்பு என்ற உணர்வின் பன்முகவடிவங்களே உறவு, பாசம், நட்பு, இரக்கம், பரிவு, காதல்....என

எல்லாமாக அமைகின்றது. தம்மையொத்த ஒவ்வொரு மனிதனையும் தாமாக பார்பதே மனிதநேயம். நாடு, மொழி, இனம் கடந்து ஒட்டுமொத்தமான மனித இனத்தையும், மனிதா் தம் இயல்புகள், பண்புகள், மாண்புகள் யாவற்றையும் உள்ளடக்கிக் காட்டும் ஒருகுறியீட்டுச் சொல்லே மானுடம் ஆகும். ஆங்கிலத்தில் இதனை Humanisam என்பர்.

**புறநானூற்றில் மனிதநேயம்**

சங்கப் புலவர்கள் வளமான வாழ்வியல் சிந்தனைகளை எல்லாக் காலத்திற்கும் ஏற்றவாறு தொலைநோக்குப் பார்வையில் முன்வைத்துள்ளனர். பெருஞ்சித்திரனாா் என்னும் புலவன் தன் குடும்பம் வறுமையால் வாழ்வதற்கு வழியின்றி தவித்துக் கொண்டிருக்கிறது என்றும், என் வீட்டு அடுப்பில் பூனைகள் உறங்கிக்கொண்டிருக்கின்றன. என் குழந்தைகளோ பசியால் வாடுகின்றன என தன் வறுமையை 'குமணவள்ளலிடம்' கூறுகின்றான். நன்கு புலமை பெற்ற புலவனின் நிலையை எண்ணி குமணன் பெருஞ்செல்வத்தை அவனிடம் தருகின்றான். அதை வாங்கிகொண்டு தன்மனைவியிடம் கொண்டுசேர்த்த புலவன், இவை நமது தேவைக்கு அதிகமாகவே உள்ளன. எனவே

நின்னயந்துஉறைநர்க்கும் நீநயந்துஉறைநர்க்கும்
பன்மாண்கற்பின் கிளைமுதலோர்க்கும்
இடும்பின் கடும்பசிதீரயாழநின்
நெடுங்குறிஎதிர்ப்பைநல்கியோர்க்கும்
இன்னோர்க் கென்னாதுஎன்னோடும் சூழாது
வல்லாங்குவாழ்தும் என்னாதுநீயும்
எல்லோர்க்கும் கொடுமதிமனைகிழவோயே
பழந்தூங்குமுதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கியவளனே (புறம்.163)

உன்னை தேடிவருபவர்களுக்கு என்னிடம் கேட்டு இப்பொருள்களை நீ வழங்கவேண்டாம். ஏனென்றால் இது குமணன் கொடுத்தச் செல்வம் இதை வேண்டியவர்களுக்கு கொடு என்று கூறுகின்றான். இதுவே மனிதநேயம். ஒருவன் வறுமையால் வாடுவதை கண்ட புரவலன் அவனுக்கு உதவியதை தன்னை போல வறுமையில் இருப்பவனுக்கு வழங்கு என்று கூறுவதை புறநானூறு பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன.

பிற உயிர்கள்படும் துன்பத்தைப் போக்க அத்துன்பத்தைத் தானும் ஏற்று நடுவுநிலையோடு ஆட்சிபுரிந்த மனுநீதிச் சோழனின் மனிதநேயம் மகத்தான ஒன்றாகும்.

இது மனிதன் பிற உயிர்கள்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகும். உலகில் உள்ள எல்லா உயிர்களும் தன் உயிரைப்போல பார்க்கும் தன்மையை

அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நீரயங் கொள்பவரொடு ஒன்றாது, காவல்
குழவிகொள்பவரின் ஓம்புமதி (புறம் 5:5-7)

அன்புகாட்ட வேண்டிய இடத்தில் அன்பும், திருத்தி வளர்க்க வேண்டிய இடத்தில் திருத்தியும் குழந்தையின் நலத்தைப் பேணிகாப்பது போல தன் மக்களையும் பார்க்கும் மன்னனின் அன்பின் நேயத்தை இப்பாடல்கள் விளக்குகின்றன.

**பதிற்றுப்பத்தில் மனிதநேயம்**

அரசனே ஆட்சித்துறையின் மையமாக விளங்கினான். அரசனை, கோ, மன்னன், வேந்தன், கொற்றவன் என்று அழைத்துள்ளனர். சேரர்களின் ஆட்சி எல்லையாக வடக்கே இமயமும், தெற்கேகுமரியும், மேற்கும், கிழக்கும் கடல்களும் இருந்துள்ளன. இதனைப் பல பாடல்களால் அறியலாம். சேரர்களிடம் காலாட் படை, குதிரைப் படை, யானைப் படை, தேர்ப் படை போன்ற படைகள் இருந்துள்ளன. மன்னனே நீதி வழங்கும் அதிகாரம் பெற்றிருந்தான். இருப்பினும் தவறு செய்கின்றபோது தக்க சமயத்தில் புலவர்கள் மன்னனை நல்வழிப்படுத்தியுள்ளனர்.

சினனேகாமம் கழி கண்ணோட்டம்
அச்சம்,பொய்ச் சொல்,அன்புமிகஉடைமை
தெறல் கடுமையொடு, பிறவும் இவ் உலகத்து
அறம் தெரிதிகிரிக்கு வழியடைஆகும் (பதிற்றுப்:1:4)

மன்னர்கள் சினம், காமம், அளவிறந்த கண்ணோட்டம், அச்சம், பொய்ச் சொல், கழி பேரன்பு, கொடுஞ்செயல் ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும் எனப் பாலைகௌதமனார் அறிவுறுத்துவதை அறியமுடிகிறது. நாட்டை வழி நடத்தும் மன்னன் வழி தவறும் சமயங்களில் புலவர்கள் அதை நெறிப்படுத்தியதை சங்கப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இது தனி ஒருமனிதன் மீதுகொண்ட அக்கறையினால் அல்ல நாட்டுமக்கள் மீதுகொண்ட மனிதநேயத்தால் என புரிந்து கொள்ள வைக்கின்றன.

**மதுரைக்காஞ்சியில் மனிதநேயம்**

மதுரைக் காஞ்சியில் மக்கள் அறம் பிறழாதவர்கள், கள்ளாமை, பிறர்மனை நயவாமை போன்ற அல்லனவற்றைக் களைந்து மனதை இறை நெறியில்

செலுத்தியவர்கள். பேரிளம் பெண்டிர் நிறைந்த பௌத்தப் பள்ளிகள் நிறைந்த அமணப்பள்ளி, கொல்லாமை, கள் உண்ணாமை, பொய் கூறாமை அரசனை அஞ்சாது இடித்துரைத்து நன்னெறிப் படுத்துபவர்களாக இருந்துள்ளனர். அடக்கம் உடையவர், பெருமைக்குரியவர்கள், புகழால் உயர்ந்தவர், அரசானால் சிறப்புப் பெற்ற அமைச்சர்கள் பற்றியச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

தாமும் அவரும் ஓராங்குவிளங்கக்
காமர் கவினியபேர்இளம் பெண்டிர் (மதுரைக்:464-465)

அறநெறிபிழையாஅன்புடன் நெஞ்சின்
பெரியோர் மேஎய் இனிதின் உறையும்
குன்றுகுயின்றன்னஅந்தணர் பள்ளியும் (மதுரைக்:472-474)

வானமும் நிலனும் தாம் முழுது உணரும்
சான்றகொள்கைசாயாயாக்கை
ஆன்றுஅடங்குஅறிஞர் செறிந்தனர் நோன்மார் (மதுரைக்:479-481)

நன்றும் தீதும் கண்டுஆய்ந்துஅடக்கி
அன்பும் அறனும் ஒழியாதுகாத்து
பழிஒரீஇ உயர்ந்துபாய் புகழ் நிறைந்த
செம்மைசான்றகா விதிமாக்களும் (மதுரைக்:496-499)

மேற்காட்டிய சான்று வழிப் பல மதத்தினர் வாழ்ந்த பெருமைமிகு நகரம் மதுரை என்பதோடு அரசனுக்கு நல்லறிவூட்டிய அமைச்சனும் வாழந்தநகரம் மதுரை என்பதைத் தெளிவுப்படுத்துகின்றன.

**பட்டினப்பாலையில் மனிதநேயம்**

பட்டினப்பாலையில் வாழும் மக்கள் அனைவரும் நடுவுநிலைமையோடு வாழந்தனர். தன்னைப் போலவே மற்றவர்களையும் அவர்கள் பார்த்துள்ளனர். அவரவர் பண்டத்திற்கு ஏற்றவிலைக் கூறி அதைக் குறைபாடாமல் கொடுத்துள்ளர். அவர்கள் உண்மையை பேசும் மக்களாகவே இருந்துள்ளனர். அதேபோல் தான் வாங்கும் பொருள்களுக்கு மிகுதியாக கொள்ளாமலும் வணிகம் செய்துள்ளனர்.

நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்றநல் நெஞ்சினோர்
வடுஅஞ்சிவாய் மொழிந்து

தமவும் பிறவும் ஒப்பநாடி
கொள்வதூஉம் மிகைகொளாது,கொடுப்பதூஉம் குறைகொடாது
பல் பண்டம் பகர்ந்துவீசும்
தொல் கொண்டிதுவன்று இருக்கை (பட்டினப்:205-212)

மொழிபலபெருகிபழிதீர் தேஎத்துப்
புலம் பெயர் மாக்கள் கலந்து இனிதுஉறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் (பட்டினப்:216-218)

பலமொழிப் பேசும் மக்கள் அங்குவசித்துள்ளனர். அவர்கள் மத்தியில் வேறுபாடுயில்லாது ஒருவரை ஒருவர் மதித்து ஒற்றுமைஉணர்வோடு வாழ்ந்துள்ளனர் என்பதையும் பாடல் வழி மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றன.

**ஆற்றுப்படையில் மனிதநேயம்**

தொல்காப்பியம் காட்டும் ஆற்றுப்படை இலக்கணம் 'பெற்ற பெருவளம் பெறாதவர்க்கு' எடுத்துச் சொல்லி வழிப்படுத்திப் பயனைப் பெற வழிகாட்டுவதே, பகுத்துண்டு பல்லுயிரோம்புதலை விட சிறந்தது மனிதப் பண்பாகும்.

சங்ககாலப் புரவலர்கள் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களைப் புரந்தனர். இரவலர் சைவஉணவு, அசைவஉணவு ஆகிய இருவகை உணவைப் பெற்றனர், அவற்றுள் வேகவைத்தது, சுட்டது, பொரித்தது மற்றும் இனிப்புப் பண்டங்கள் போன்ற உணவையும் உண்டுகளித்தனர். செம்மறியாட்டின் வேகவைத்த பருத்த மேல் தொடை, சுட்ட இறைச்சி, பனியாரம், பொரிக்கப்பட்ட பொரிக்கறி, முரியா அரிசியில் விரல் என நிமிர்ந்தநிரல் அமைபுழுக்கலோடு இரவலர்கள் பெற்றனா். அதுமட்டுமல்ல கொல்லை நிலத்தை கொழுவைப் போன்று இரவும் பகலும் இறைச்சியை மென்று அவர்கள் பற்கள் மழுங்கிப் போகும் அளவுக்கு உணவுபெற்றதைப் பொருநர் ஆற்றுப்படை (103-11) காட்டுகின்றது.

"ஆடையில்லாமனிதன் அரைமனிதன், உண்ணாமல் போனாலும் உடுத்தாமல் போகாதே, ஆள் பாதி ஆடை பாதி" என்ற பழமொழிகள் உள்ளன. ஆடைக்கு வறுமைப்பட்ட இரவலர்களை புரவலர்கள் கண்டதும் முதலில் அவர்களின் ஆடையை நீக்கிவிட்டு புதிய பட்டான ஆடையை வழங்கினான் என்றால் இதை விட மனிதநேயத்தை அடையாளப்படுத்த வேறு சான்று எடுத்துரைக்கமுடியாது.

ஈரும்,பேனும் இருந்து இறைகூடி
வேரொடுநனைந்துவேற்று இழைநுழைந்த
துன்னற் சிதாஅர் துவரநீக்கி
நோக்குநுழைகல்லாநுண்மையபூக்கனிந்து
அரவுஉரிஅன்னஅறுவைநல்கி (பொருந:79-83)

ஈரும்,பேனுமாகவந்த இராவலனை மன்னன் தன் பக்கத்தில் அமர்த்தி அவனுக்கு முதல் விருந்தோம்பல் செய்தான் என்றால்? மனிதனை மனிதனாக மதித்தது சங்க இலக்கியம் என்பதை பொருநராற்றுப்படையில் உள்ளப் பாடலடிகள் தெளிவுப்படுத்துகின்றன.

**சிறுபாணாற்றுப்படையில் மனிதநேயம்**

சிறு பாணனை நல்லியங்கோடனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல். சிறுபாணாற்றுப்படையில் ஒய்மாநாட்டு நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் நல்லியக்கோடனின் நாட்டுவளத்தை மட்டும் கூறாது, மூவேந்தர்களின் நாட்டு வளத்தையும் கூறுகின்ற பொழுது புலவரின் நடுவுநிலமை இங்கு புலப்படுகின்றது. நல்லியக்கோடனிடம் அவனுடையச் சிறப்பை மட்டும் கூறாது, கடையேழு வள்ளல்களான பேகன், பாரி, ஆய்ஆண்டிரன், அதியமான் வல்வில்ஓரி, நள்ளி ஆகியோரின் கொடைத் தன்மையையும் சேர்த்து கூறுகிறார்.

கான மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய….
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய (சிறுபாண்:85-89)

கடையேழு வள்ளல்களின் கொடைத்தன்மையை எடுத்துரைத்து விட்டு. இந்த கொடைத் தன்மை அத்துனையும் ஒருங்கே பெற்றவன் நல்லியகோடன் என்பதை

எழுவர் பூண்டஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலிவியலகம் விளங்க
ஒருதான் தாங்கியஉரனுடைநோன்தாள் (சிறுபாண்:113-115)

பாடல்அடிகள் உறுதிப்படுத்துகின்றன. புலவர்கள் மன்னனிடம் தன்னுடைய தேவையை மட்டும் இங்கு நிறை வேற்றவில்லை என்பதையும் அவர்களிடம் உள்ள நிறை, குறைகளையும் எடுத்துரைத்துள்ளனர் என்பது தெளிபடுகின்றன.

**முடிவுரை**

உலகத்தில் இறைவனால் படைக்கப்பட்ட மகத்தான உயிரினம் மனித இனம். மனிதனை மனிதனாக மதிப்பது தமிழினம். சங்ககால மக்கள் மத்தியில் மனிதர்கள் மதிக்கப்பட்டனர் என்பதும், அவர்களிடம் அன்பு, பரிவு, பாசம் போன்ற குணங்கள் மேலோங்கி இருந்தது என்பதையும், மன்னன் - புலவன், மன்னன் - மன்னன், மன்னன் - மக்கள், மக்கள் - மக்கள் மத்தியில் உறவு நிலை என்பது நிலையான அன்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன என்பதைச் சங்கப் பாடல்கள் நிலைநிறுத்துகின்றன. இன்றைய சமூகத்தின் மத்தியில் ஏற்படும் பிரிவினை வாதம், சுயநலம், பேராசை, தான் என்ற தன்னலம் இவை அனைத்தும் தடைப்பட்டு சங்ககால மக்களைப் போல தமிழர்கள் மனிதநேயத்தை இளைய சமுதாயத்திடம் மலர்ந்திடச்செய்யவேண்டும்.

**துணைநின்ற நூல்கள்**


1. சுப்பிரமணியன்.ச.வே,சங்க இலக்கியம் மூலமும் உரையும் தொகுதி - 11, பத்துப்பாட்டு,கோவிலூர் மடாலயம் பதிப்பகம், கோவிலூர் -630307.முதற்பதிப்பு-2003
2. இளங்கோ.நா.,பொருநராற்றுப்படை,கங்கைபுத்தகநிலையம், 23,தீனதயாளுதெரு,தியாகராயநகர்,சென்னை– 600017. முதற்பதிப்பு ஜீன் 2010, இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி, 2020
3. வசந்தா.த.சங்க இலக்கியத்தில் மனிதநேயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098, முதல் பதிப்பு : பிப்ரவரி,2013
4. www.tamilvu.org